# அவுஸ்திரேலியா

# தமிழ்மொழித் தேர்வு

**Reading Time: 15 Minutes**
**Writing Time: 90 Minutes**

# வளர்நிலை 5

## அரை ஆண்டுத் தேர்வு
## 2006

சுட்டெண் **(Index) :** | | | | | | | |

வருடம்: 05 பகுதி 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஆண் எதிர்ப்பால் சொல் ----------- மாணவி 2. பெண் 3. அம்மா 4. சிறுமி | 1 | 2 | 3 | 4 |
| 2 | நாங்கள் சினிமாவுக்கு காரில் ----------- 1.போனேன் 2.போகிறாள். 3.போகிறோம். 4. போனான். | 1 | 2 | 3 | 4 |
| 3 | தந்தை என்பதன் ஒத்த சொல் ---------------. அம்மா 2. தாத்தா 3. அப்பா. 4. மாமா | 1 | 2 | 3 | 4 |
| 4 | மல்லிகைப்பூ இனிய --------------- உடையது. 1.நிறம் 2. வாசனை 3. மனம் 4. குணம் | 1 | 2 | 3 | 4 |
| 5 | ----------- பிதாவும் முன்னறி தெய்வம். 1. தந்தையும் 2. அக்காவும் 3. அன்னையும் 4. அப்பாவும் | 1 | 2 | 3 | 4 |
| 6 | உறக்கம் என்பதன் ஒத்தசொல் -------------. 1. விருப்பு 2. பிரிவு 3. விழிப்பு 4.தூக்கம் | 1 | 2 | 3 | 4 |
| 7 | அரசனின் எதிர்பால் சொல் --------------. 1. மனைவி 2. அம்மா 3. அரசி 4. நடிகை | 1 | 2 | 3 | 4 |
| 8 | நான் பாட்டுப் பாடுகிறேன். அவனும் பாட்டுப் 1. பாடுகிறாய் 2. பாடுகிறோம். 3. பாடுவேன் 4. பாடுகிறான். | 1 | 2 | 3 | 4 |
| 9. | தயிர் எங்கிருந்து எடுக்கப்படும் உணவு ----------------. 1. தண்ணீர் 2. பால் 3. பழம் 4. படம் | 1 | 2 | 3 | 4 |
| 10. | தெய்வம் தொழு. இதில் தெய்வம் என்பது ---------------. 1. மாதா 2. கடவுள் 3. தம்பி 4. தங்கை | 1 | 2 | 3 | 4 |
| 11. | ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று கூறியவர் ----------. 1. வள்ளுவர் 2. பாரதியார் 3. ஔவையார் 4. ஆதித்தனார் | 1 | 2 | 3 | 4 |
| 12. | எண்ணும் ---------- கண் எனத் தகும். 1. அழகு 2. கல்வி 3. எழுத்தும் 4. அழகு | 1 | 2 | 3 | 4 |
| 13. | ஆகாயம் என்பதன் ஒத்த சொல் -------------. 1. எண் 2. வானம் 3. முகில் 4. எண்கள் | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. | உயர்வு இதன் எதிர்ச்சொல் ---------------.<br>1. மறைவு 2. உதிப்பு 3. இறப்பு 4.தாழ்வு | 1 | 2 | 3 | 4 |
| 15 | அவன் எப்போதும் **உண்மைமையாக** பேசுவான் எதிர்சொல்<br>1. உண்மை 2. பொய் 3. தோல்வி 4. பதில் | 1 | 2 | 3 | 4 |
| 16 | ------------ கதைப் புத்தகம் படிக்கிறோம்.<br>1 நாங்கள் 2. நான் 3. நாம் 4. அவர்கள் | 1 | 2 | 3 | 4 |
| 17. | அந்தப் படத்தின்கண்ணாடி கீழே ----------- உடைந்தது.<br>1. விழுந்து 2. விழுந்தது 3. விழுந்த. 4. விழு. | 1 | 2 | 3 | 4 |
| 18. | ஆங்கிலம் ஒரு ---------- மொழி<br>1. புதிய 2. நாகரீக 3. பழைய 4. கலப்பட | 1 | 2 | 3 | 4 |
| 19. | தோட்டக்காரனின் எதிர்பால் சொல் ---------------.<br>1. தலைவி 2. சகோதரி 3. மாணவி 4. தோட்டக்காரி | 1 | 2 | 3 | 4 |
| 20. | விமானம் உயர எழுந்து ------------- பறந்தது.<br>1. தரையில் 2. நீரில் 3. வானத்தில் 4. காற்றில | 1 | 2 | 3 | 4 |
| 21 | தமிழர்களின் புதுவருடம் வரும் மாதம் -------------.<br>1. தை 2. சித்திரை 3. ஆவணி 4. மார்கழி | 1 | 2 | 3 | 4 |
| 22 | கூடி -------------- பாப்பா<br>1. படி , 2. விளையாடு, 3. நட 4. தூங்கு | 1 | 2 | 3 | 4 |
| 23 | எங்கள் கணக்குபாடத்தை நாங்களே----------------<br>1. வந்தன. 2. செய்தோம். 3. செய்தன 4. செய்தான். | 1 | 2 | 3 | 4 |
| 24 | இமைப்பொழுது பிரித்து எழுதினால்<br>1. இமைப் + பொழுது 2. இமை + பொழுது<br>3. இமை + ப்பொழுது 4. இ + பொழுது | 1 | 2 | 3 | 4 |
| 25 | அவர்கள் அந்த --------------- தண்ணீர் ஊற்றினார்கள்.<br>1. மரத்தை 2 . மரத்துக்கு 3. மரத்தில் 4. மரத்தால் | 1 | 2 | 3 | 4 |
| 26 | பஞ்சாரத்தி என்பது ---------வகை தீபங்களை குறிக்கும்<br>1. ஆறு 2. ஐந்து 3. ஒன்பது 4. ஏழு | 1 | 2 | 3 | 4 |
| 27 | மிருகங்களின் அரசன் -------------.<br>1. கரடி 2. முயல் 3. சிங்கம் 4. யானை | 1 | 2 | 3 | 4 |
| 28 | பகல் என்பதன் எதிர்சொல் --------------.<br>1. மாலை 2. பிற்பகல் 3. காலை 4. இரவு | 1 | 2 | 3 | 4 |
| 29 | சுந்தரன் மாலையில் ------------------ போவான்.<br>1. படிக்கப் 2. பறிக்கப் 3. விளையாடப் 4. பாடப் | 1 | 2 | 3 | 4 |
| 30 | அவள் கால் சதங்கை --------- என ஒலித்தது<br>1. சலசல 2. படபட 3. கடகட 4. கலகல | 1 | 2 | 3 | 4 |

(30 புள்ளிகள்)

**வினாக்கள்; பகுதி 2 வருடம்: 05**

1.**பின்வரும் பந்தியை வாசித்து, கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

உலகில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றார்கள் ஒவ்வொரு இன மக்களும் தங்களுக்கென வேறுவேறு வகையான விழாக்களை பாரம்பரியமாகக் கொண்டுள்ளார்கள். இவ்விழாக்களிடையே பல்வேறு ஒற்றுமைகளும் உண்டு. உதாரணமாக எமது தைப்பொங்கல் விழாவையும் ஜப்பானியரின் அறுவடை விழாவையும் குறிப்பிடலாம்.. பொதுவாக மக்கள் திருநாளை வரவு பார்த்து மகிழ்ச்சியாக கொண்டாடுவார்கள். உறவினர்கள் நண்பர்கள் ஒன்று கூடி மகிழ்வார்கள். அன்பும் உறவும் மேலோங்க இவ் விழாக்கள் உதவுகின்றன. ஒவ்வொரு விழாவும் கொண்டாடும் முறைகள் வேறுவேறாக இருக்கும் இதன்மூலம் அவர்களின் பண்பாட்டு கலாச்சாரங்கள் வெளிப்படும். இவை அந்த அந்த இனத்தின் தனித்துவத்தைக் காட்டும். இவ்விழாக்களின் மூலம் கூட்டாக செயற்படும் தன்மையும் ஒருவரை ஒருவர் புரிந்துணர்ந்து ஒற்றுமையாக வாழ்வதற்கு வழி வகுக்கலாம்.

1. மேல் உள்ள பந்தியில் பேசப்பட்ட விடயம் என்ன?

_______________________________________________

2. தைப்பொங்கல் திருவிழாவுடன் ஒப்பிடப்பட்ட விழா எது?

_______________________________________________

3. இவ்விழாக்களில் யார்யாரெல்லாம் ஒன்று கூடுவார்கள்?

_______________________________________________

4. எவையெல்லாம் வெளிப்படும் என கூறப்படுகின்றது?

_______________________________________________

5. இவ்விழாக்கள் மூலம் என்ன வழி வகுக்கலாம்.?

_______________________________________________

(10 புள்ளிகள்)

2. நடன வகுப்புக்கள் உமது பாடசாலையில் ஆரம்பிக்க உள்ளார்கள். நீர் அதற்கு எப்படி ஒரு விளம்பரம் எழுதுவீர். அதில் எங்கு எப்போது யாரால் நடத்தப்படுகின்றது போன்ற விபரங்கள் எழுதப்படவேண்டும்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

(10 புள்ளிகள்)

3. பாடசாலை விடுமுறைக்கு உமது நண்பனின் விவசாயப் பண்ணைக்கு போய்வருவதற்கு அனுமதி கேட்டு அவனுக்கு ஒரு கடிதம் எழுதுக?

(10 புள்ளிகள்)

4. **பின்வரும் வசனங்களை பிரித்து இரு வசனமாக்குக.**

தோட்டம் மிகவும் அழகாகவும். சுத்தமாகவும் இருந்தது

___

பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் ஆடினார்கள்

___

யானை பெரிய தந்தங்களுடனும் பெரிய காதுகளுடனும் இருந்தது..

___

அவனைக் கண்ட நாய் மிகவும் சத்தமாக குரைத்தது.

___

மாணவர்கள் பாடலை பாடிக்கொண்டே ஆடினார்கள்.

___

(10 புள்ளிகள்)

5.**பின்வரும் சொற்களைக் கருத்தமைய ஒழுங்கு செய்து எழுதுக.**

மேலிருந்து - வந்து - இறங்கி - கீழே - அவன் -வந்தான்

---------------------------------------------------------------------------------------------------------

அவர்கள் - சென்றார்கள் - கோயிலுக்கு - நடந்து

___

பல் - காலையில் - எழுந்து - வேண்டும் - துலக்க

___

எங்கே - செய்து - கொண்டிருக்கிறாய் - நீ - வேலை?

___

அவன் - தண்ணீர் - ஊற்றினான் - செடிகளுக்கு - சாடிக்குள் - இருந்த

___

(10 புள்ளிகள்)

6. **சரியான சொல்லை தெரிவு செய்து எழுதுக.**

அகத்தின் ------------------ முகத்தில் தெரியும் (தோற்றம், முதிர்ச்கி, அழகு, குறிப்பு)

அடக்கம் ஆயிரம் -------------------- தரும் (காசு, பணம் , பொன், வெள்ளி)

--------------- வளையாதது ஐம்பதில் வளையுமா? (ஐந்தில், இளமையில், பத்தில், ஏழில்)

அளவுக்க மிஞ்சினால் ----------------- நஞ்சு. (தேன், பழம், அமுதமும், பாலும்)

அன்பான நண்பனை ----------- அறியலாம் ( உதவியில், அவசரத்தில், பேச்சில், ஆபத்தில்)

அன்பிருந்தால் ஆகாததும் ----------------------- (வேகும், போகும், நோகும், ஆகும்)

ஆக்கப் பொறுத்தவன் ----------------- பொறுக்க வேண்டும். (ஆற, பொறு, பெற, பார்க்க)

ஆத்திரக்காரனுக்கு ------------------- மட்டு. (கோபம், புத்தி, குணம், பொறுமை)

---------------------- அறியாமல் காலை விடாதே (நேரம், இடம், வேகம், ஆழம்)

ஆனைக்கும் ------------------------ சறுக்கும். (இடி, அடி, படி, கடி)

(10 புள்ளிகள்)

7. உலக அதிசயங்களில் ஒன்றைப் பற்றி எழுதுக உ.ம் தாஜ்மகால், பிரமிட், ஈபிள் டவர். கட்டுரை எங்கு இருக்கிறது? எப்போது கட்டப்பட்டது? எதற்காக கட்டப்பட்டது? போன்றவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

(10 புள்ளிகள்)